[1995 ஏப்ரல் 20

திரு. ஆ. செல்லதுரை: வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதிநிலையின் காரணமாக இல்லை என்று சொன்னார்கள். 50 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அந்தப் பாலத்தை கட்டாவிட்டாலும், அந்தப் பாலத்தினுடைய நீளமே கிட்டத்தட்ட 25 மீட்டர் இருக்கும் அல்லது 30 மீட்டர்தான் இருக்கும். இதிலே குழாய்களைப் பதித்து ஒரு சிறிய தாம்போகியையாவது போட்டுத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஓடையினுடைய அகலத்தைக் குறிப்பிடுகின்றபொழுது, 250 மீட்டர் என்று குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே, தரைமட்டப் பாலம் கட்டுவது என்றாலும்கூட 50 இலட்சம் ரூபாயாகும் என்று மதிப்பீடு சொல்லப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே நான் தெரிவித்தது தரைமட்ட பாலத்திற்குத்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுசம்பந்தமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற போக்குவரத்து அலகுகளைப் பற்றி தீவிரமாக பரிசீலனை செய்து மேல் நடவடிக்கையை இந்த அரசு எடுப்பதற்கான உரிய முயற்சிகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 371, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

371—

பேரணாம்பட்டு பேரூராட்சியில் வீட்டு வசதி வாரிய வீடுகள்

35716*—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டும் பணி துவங்கப்படும்?

1995 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு இஸ்லாமிய மக்கள் அதிகமாக வாழ்கின்ற தொழில் நகரம். வளர்ந்து வரும் நகரம். வீடுகள் வாடகைக்குக் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. இருக்கின்ற வீடுகளிலும் நிறைய கூட்டுக் குடும்பங்கள். தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்களுக்கு தவணை முறையில் எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி., டைப் வீடுகளைக் கட்டித் தந்தால் உதவியாக இருக்கும் என்பதால் மீண்டும் பரிசீலனை செய்து வீடுகள் கட்டித்தர ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1990–ஆம் ஆண்டிலே மார்ச் மாதத்தில் பேரணாம்பட்டு நிலை–1 திட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர நகர வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் டிமாண்ட் ரெஜிஸ்தர் அதாவது தேவை மனுக்கள் பொது மக்களிடமிருந்து வரவேற்கப்பட்டன. அப்பொழுது 12 தேவை மனுக்கள் மட்டுமே பெறப்பட்டன. மீண்டும் 1991–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பேரணாம்பட்டு நிலை–2 திட்டத்தில் வீடுகள் கட்டும் திட்டத்திற்கு டிமாண்ட் ரெஜிஸ்தர் செய்வதற்காகத் தேவை மனுக்கள் கோரப்பட்டன. அப்பொழுது ஒரேயொரு தேவை மனு மட்டுமே பெறப்பட்டது. எனவே அங்கே தேவையான மனுக்கள் டிமாண்ட் ரெஜிஸ்தர் செய்யப்படாத காரணத்தாலே அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரணாம்பட்டு பேரூராட்சியில் பல பகுதிகள் விலை உயர்ந்த இன்டஸ்டிரியல் பகுதி ஆகும். நிலம் கிடைப்பதில சிரமமாக இருக்கிறது. எந்த இடத்தில் குடியிருப்பு வரும் என்று நிச்சயம் இல்லாத நிலையில் நிறைய பேர் மனுச் செய்யவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களும், அவர்களிடத்தில் மனு தந்தபொழுது,

அவருடைய அறிவுரையின் பேரில் சென்ற ஆண்டு வீட்டு வசதி வாரிய அதிகாரிகளுடன் நானும் சம்பந்தப்பட்ட தேவைப்படுகின்ற இடத்தைப் பார்வையிட்டேன். போக்குவரத்து, குடிநீர் வசதி உள்ள பேரணாம்பட்டிலிருந்து குடியாத்தம் சாலை, பேரணாம்பட்டிலிருந்து ஆம்பூர் சாலையில் வீடுகள் கட்டித் தந்தால் தேவை டிமாண்ட் அதிகமாக இருக்கும். அப்படிப்பட்ட வசதியான இடத்தில் வீடுகள் கட்டித் தர டிமாண்ட் அதிகமாக நிச்சயமாக, நிறையபேர்களை மனுச் செய்யச் சொல்கிறேன். அப்படி மனுக்கள் வரும்பொழுது, இந்த ஆண்டு வீடுகள் கட்டித் தர அமைச்சர் ஆணையிடுவாரா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரணாம்பட்டில் இன்றையதினம் வீடு கட்டும் திட்டம் எதுவும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடைய பரிசீலனையில் இல்லை. ஆனால் அதேநேரத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறைந்த பட்சம் 50 நபர்களிடத்திலிருந்து வீட்டு வசதி வாரியம் கட்டித் தருகிற வீடுகளை நாங்கள் பெற்றுக் கொள்கிறோம் என்கின்ற மனுக்களைப் பெற்று தருவார்களேயானால் அதுகுறித்து வீட்டுவசதி வாரியம் தன்னுடைய கூட்டத்திலே முடிவெடுத்து பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 372, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

372—

புதிய ரக வெற்றிலையை அறிமுகம் செய்தல்

33056*—திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புதிய ரக வெற்றிலையை அரசு அறிமுகம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS